Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 02 சனிக்கிழமை (13-02 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 78

## வங்கக் கடல் சம்பவம்:

# ஐ.நா.விசாரணைக்கு புலிகள் விண்ணப்பம்

## இந்தியாவுக்கு எதிராக மனு

லண்டன், பெப்ரவரி 13

வங்கக் கடலில் கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகள் உயிரிழக்கக் காரணமான இந்திய அரசின் நடவடிக்கை குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும்.

— இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் விடுதலைப் புலிகள் முறையீடு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சர்வதேச சட்டங்களை மீறியதன் மூலம் போராளிகளின் படகு ஒன்று நிர்மூலமாக்கப்படும் செயலை இந்தியா நடத்தியிருக்கிறது என்றும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளின் அனுசரணையுடன் உருவான அமைதித் திட்டம் ஒன்றை எடுத்துக் கொண்டு, தாயகம் திரும்பிக்கொண்டிருந்த கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து வழி மறித்து, மடக்கி இந்தியக் கடல் எல்லைக்குக் கூட்டிச் சென்றதன் மூலம், இந்தியா, இலங்கையில் ஏற்படவிருந்த அமைதியைத் திட்டமிட்டுக் குழப்பியிருக்கிறது என்று விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

கிட்டு மற்றும் போராளிகளின் மறைவை அடுத்து. சர்வதேச சமாதான அமைப்பான "குவாக்கர்ஸ்" குழு விடுத்த பகிரங்க அறிக்கையும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை ஊர்ஜிதப்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விடயத்தில் — இந்தியா தொடர்ந்து மௌனம் சாதித்து வருவது மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது

(உ-3-6)

## தமிழகப் பொலீஸார் சம்பந்தப்படவில்லை

### ஜெயலலிதா அறிவிப்பு

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கிட்டு பயணம் செய்த கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் தமிழக அரசோ, தமிழகப் பொலிஸாரோ சம்பந்தப்படவில்லை. முழுக்க முழுக்க இந்தியக் கடற்படையும் மற்றும் புதுடில்லி அரசுமே இந்த விடயத்தைக் கையாண்டன.

— இவ்வாறு கூறினார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.

தமிழநாடு சட்டசபையில் நேற்று விவாதம் ஒன்றில் பங்குபற்றி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். [உ-எ]

## 1,500 தமிழக இளைஞருக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி?

### கைதானவர் தெரிவித்தாராம்

தமிழக இளைஞர்கள் ஆயிரத்து 500 பேருக்கு யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதப் பயிற்சி அளித்து வருகின்றனராம்.

பயிற்சி பெற்ற முதலாவது குழுவினர் யாழ்ப்பாணத்தில் இருந்து வள்ளத்தில் காயல் பட்டணம் வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் —

மேலும் ஒரு குழுவினர் யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற அங்கு அனுப்பிவைக்கப் படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்த சாமுவேல் என்பவரை திருநெல்வேலி பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றும் —

(6-ஆம் பக்கம் பார்க்க)

உளவாளிகள்!!!

அவதானமாக இருக்கவும்..!

எங்கும் இருப்பர் உளவாளிகள்! கவனம்!

# இலங்கையில் தொடர்ந்து மனித உரிமை மீறல்கள்

### சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் குற்றச்சாட்டு

லண்டன், பெப் 13

இலங்கை அரசு மனித உரிமைகளை மதிப்பதாக உறுதியளித்த போதிலும், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது 1992 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது

மனித உரிமைகளைப் பேணுவதாக அரசாங்கம் பாசாங்கு செய்கின்றதேயொழிய, சிறையில் உள்ளோரின் அவலங்கள் ஒரு சிறிதளவேனும் குறைந்தபாடாக இல்லை என்று மன்னிப்புச் சபை நேற்றுக் காலை லண்டனில் வெளியிட்ட தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் இலங்கை அரசு குறித்து, குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ 1991 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சர்வதேச மன்னிப்புச் சபை தயாரித்து வெளியிட்ட கருத்துகள் குறித்து இலங்கை அரசு போதிய கவனம் செலுத்தவில்லை.

★ மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உதவும் நாடுகளின் தூதர்கள் இலங்கை அரசுக்கு கண்டனம்

கொழும்பு, பெப் 13

மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக ஐ. நா வும் சர்வதேச மன்னிப்புச் சபையும் 1992 இல் சமர்ப்பித்த சிபார்சுகளை பூரணமாக அமுல் நடத்தத் தவறியதற்காக கொழும்பு அரசை, இலங்கைக்கு உதவும் மேற்கு நாடுகளின் தூதர்கள் அண்மையில் பலமாகக் கண்டித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, கூட்டுப் படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ஆகியோர் கலந்து கொண்ட உயர்நிலை மாநாடு ஒன்றில் மேற்கு நாட்டுத் தூதர்கள் இக்கண்டனத்தைத் தெரிவித்தனர் என்று "சண்டே ரைம்ஸ்" தெரிவித்துள்ளது

கொள்கையளவில் மனித உரிமைகளைப் பேணுவதற்கான சிபார்சுகளை ஏற்றுக்கொண்ட கொழும்பு அரசு அவற்றை பூரணமாக அமுல் நடத்துவதை உறுதிப்படுத்தவில்லை என்றும் வெளிநாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப் 13

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று நிதித்துறை வருவாய் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

### கேரதிவு பாதை விவகாரம்:

## ஐ.நா தூதரக அதிகாரி இன்று யாழ். வருகை

கேரதிவு — சங்குப்பிட்டி பாதை திறக்கும் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

பலாலி விமான நிலையத்துக்கு வந்து சேரும் அவர் காங்கேசன்துறைக்குச் சென்று அங்கிருந்து "குமணி" கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைவார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக தலைமையகத்தில் சர்வதேச விவகார ஆலோசகராகக் கடமையாற்றும் திரு. ரியூட்டர் என்னும் அதிகாரியே இங்கு வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது நோர்வே நாட்டைச் சேர்ந்த அவர் ஜெனிவாவில் உள்ள தலைமையகத்தில் கடமையாற்றியவர். கடந்த மூன்று மாதங்களாகக் கொழும்பு அலுவலகத்தில் கடமையாற்றி வருகிறார்.

இன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் நாளை அவர் கொழும்பு திரும்புவார் என்றும் —

அவரைத் தொடர்ந்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய உயர்மட்டக்குழு ஒன்று இங்கு வரும் என்றும் — தெரிய வந்தது. (உ-3)

### கிளாலி ஊடாகச் சென்றதற்காக

## ஆயரிடம் பொலீஸார் வாக்குமூலம் பெறுவர்?

கொழும்பு, பெப் 13

யாழ் சென்று திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவிடம் இருந்து பொலீஸார் இன்னமும் வாக்குமூலம் பெறவில்லை.

அவசியம் ஏற்படுமிடத்து. அவரிடம் இருந்து பொலீஸாரினால் வாக்குமூலம் பெறப்படும் என்று கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (உ-எ)

## குடாநாட்டு வான் பரப்பில் ஓயாது ஓடிய ஹெலிகள்!

யாழ்ப்பாணம், பெப் 13

குடாநாட்டு வான் பரப்பில் நேற்று விமானங்களும், ஹெலிகளும் ஓயாது பறந்தபடி இருந்தன

குடாநாட்டின் பெரும் பாலான பகுதிகளில் ஹெலிகள் பறந்து நோட்டமிட்டுச் சென்றதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். [illegible] வலி மேற்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயர் யோசப் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 13

மன்னார் ஆயர் அதி.வண. இராயப்பு யோசப் ஞானானந்தன் நேற்று மாலை ஜனாதிபதி திரு பிரேமதாசாவைச் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி நடமாடும் செயலகத் தலைமை அலுவலகத்தில் இச்சந்திப்பு நடந்தது.

இனப்பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்றும் —

யாழ் குடாநாட்டின் மீதான முற்றுகையை நீக்கிச் சமாதானச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றும் ஆயர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

மன்னார் மக்கள் படும் கஷ்டங்களையும், இடம்பெயர்ந்த மக்களின் இன்னல்களையும் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறிய ஆயர், அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். (அ)

### குமாரி கப்பல் மூலம்

## இங்கிருந்து அனுப்பப்பட்ட தபால் பொதிகள் தேக்கம்

### கொழும்புத் துறைமுகத்தில்

யாழ்ப்பாணம் பெப். 13

அண்மையில் 'குமாரி' கப்பல் மூலம் வடபகுதியில் இருந்து அனுப்பப்பட்ட 78 தபால் பொதிகள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதியில் இருந்து கப்பல் மூலம் அனுப்பப்படும் தபால் பொதிகளை கொழும்பில் தபால் திணைக்களத்திடம் கையளிப்பதற்கு "மையாளும் கட்டணம்" என்ற பெயரில் பணம் செலுத்துமாறு துறைமுக அதிகாரிகள் தபால் திணைக்கள அதிகாரிகளிடம் கோரியுள்ளதாகவும் —

இதனை அடுத்தே மேற்படி தபால் பொதிகள் அங்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நடராசா பூமணி

வளலாயைச் சேர்ந்த அமரர் நடராசா பூமணியின் ஈமக்கிரியை இன்று (சனிக்கிழமை) காலை 10-00 மணிக்கு 21, வேம்படி வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. செல்வநாயகம்,
(மருமகன்)

(24422)

## திருமதி கந்தையா பாக்கியம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான திருமதி கந்தையா பாக்கியம் 12-02-93இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் கந்தையா (முன்னாள் Tax Collector, U. C. Point-Pedro) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி நவமணி இராசையா (நல்லூர்), திருமதி சொர்ணம் இராசலிங்கம் நீராவியடி), N. S. சிங்காரவேலு (Retired, Hospital-Secretary, Dept. of Health) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 13-02-93 மு. ப. 10-00 மணிக்கு இல; 102/3, பொற்பதி வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
N. S. சிங்காரவேலு.

(சி-4246)

## திருமதி செல்லையா இராசம்மா

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா 12-02-1993இல் காலமகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், தங்கம்மா, பாலசுப்பிரமணியம் (முன்னை நாள் உரிமையாளர், வாசன் ரேடிங் கொம்பனி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேசு (முன்னைநாள் பங்காளர், R. வைத்திலிங்கம் லிமிட்டெட், பதுளை), பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், யோகேஸ்வரி, ஞானேஸ்வரி, புஸ்பஞானம், வாசுகி (உயர் வகுப்பு மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (13-02-1993) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. பாலசுப்பிரமணியம்
(மகன்)

71, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (24411)

## நல்லதம்பி செல்லப்பா
*(காசிப்பிள்ளை அன் சன்ஸ், சங்கானை)*

சங்கானை சங்கரத்தை வீதியைச் சேர்ந்த திரு. நல்லதம்பி செல்லப்பா அவர்கள் நேற்று (12-02-93) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்பு கணவரும், திரு. செ. திருவிளங்கம் (உள்நாட்டு இறைவரி திணைக்களம், யாழ்ப்பாணம்), திருமதி க. திருப்பதிதேவி, திரு. செ. துரைசிங்கம் (காசிப்பிள்ளை அன் சன்ஸ், சங்கானை), திருமதி செ. சரோஜினிதேவி, திரு. செ. கணேசுவரன் (அருள் ஆனந்தா புடைவை நிலையம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தி. அன்னபூரணம், திரு நா. கனகரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி நிர்மலாதேவி, திரு. இ. செல்வநாயகம் (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி, சங்கானை-வட்டுக்கோட்டை வைத்தியசாலை), திருமதி க. ஆனந்தவதேவி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற திருமதி நா. நாகம்மா, திருமதி வை. பார்வதிப்பிள்ளை, திரு. ந. காசிப்பிள்ளை (உரிமையாளர், காசிப்பிள்ளை அன் சன்ஸ், சங்கானை), காலஞ்சென்ற ந. கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு கா. அருளம்பலம், திரு. கா. பரமானந்தம், திரு. கா. பரஞ்சோதி, திருமதி சி. மனோன்மணி, திருமதி இ. இராசலட்சுமி, திருமதி சோ. ஜெகதேவி, திரு. கா. மகேஸ்வரன், திருமதி கு. சலோஜினி ஆகியோரின் அன்பு பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13-02-93) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக சங்கானை கரைச்சி [வழுக்கையாறு] மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. திருவிளங்கம் (மகன்).

சங்கரத்தை வீதி,
சங்கானை. [24418]

கல்கத்தாவில் வைத்து பொலிஸாரால்

# புலிகளின் தற்கொலை படை உயர் தலைவர் கைதாம்

கொழும்பு, பெப் 13

விடுதலைப் புலிகள் இயக்கத் தற்கொலைப் படையின் உயர் தலைவர் என்று சந்தேகிக்கப்படும் வெங்கடராமன் என்பவரை கல்கத்தாவில் வைத்துப் பொலிஸார் கைது செய்தனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த செவ்வாயன்று இக் கைது இடம்பெற்றதாக சென்னைப் பொலிஸார் புதன்கிழமை ஊர்ஜிதம் செய்தனர்.

இலங்கைத் தமிழரான இவர் "இந்தியன் எயர் லைன்ஸ்" மூலம் பாங்கொக்கில் இருந்து கல்கத்தா வந்து சேர்ந்தார். உரிய ஆவணங்கள் இன்றி பயணம் மேற்கொண்டார் என்பதற்காக இவரைப் பொலிஸார் தடுத்து வைத்தனர்.

அதனை அடுத்து நடத்தப்பட்ட விசாரணையின் போது இவர் மீது பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டது. தொடர்ந்து இவரை வரவேற்க விமான நிலையத்துக்கு வந்திருந்த 3 தமிழரையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

— இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# வாணி கல்வி நிலையம்

சுன்னாகம்

## 93 A/L வினா - விடை வகுப்பு

தூய / பிரயோக } கணிதம் — திரு. கிருஷ்ணா
செவ்வாய், வியாழன் 3-00 — 5-00

இரசாயனவியல் — திரு. சிவசோதி
செவ்வாய், வியாழன் 5-00 — 6-00

தாவரவியல் — திரு. பாலா
செவ்வாய் 3-00 — 5-00

விலங்கியல் — திரு. ஞானேந்திரன்
வியாழன் -00 5-00

(கடந்த 10 ஆண்டு வினா விடைகள் செய்யப்படும்.)

ஆரம்பம்: 16-02-93 செவ்வாய்

(5816)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக் கழக வெளியீடுகள்

யாழ். பல்கலைக்கழகம் தமிழர்களின் இராச்சியத்தின் வரலாற்றுஉண்மைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் "யாழ்ப்பாண இராச்சியம்" என்னும் ஆய்வு நூலை வெளியிடுசெய்துள்ளது. கி. பி. 13 ஆம்நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரைக்குமான வரலாறு இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்நூல் பின்வரும் ஆய்வாளர்களின் கட்டுரைகளை கொண்டுள்ளது.

1. கலாநிதி சி. க. சிற்றம்பலம்
2. பேராசிரியர் வி. சிவசாமி
3. பேராசிரியர் சி. பத்மநாதன்
4. திருமதி சோ. கிருஷ்ணகுமார்
5. திரு. ப. புஸ்பரத்தினம்
6. திரு செ. கிருஸ்ணராஜா

இந்நூலின் பதிப்பாசிரியர் கலாநிதி சி. க. சிற்றம்பலம்.

பிரதி ஒன்றின் விலை ரூபா 450/-
பதிவுத் தபால் செலவு ரூபா 32/-

புத்தகம் கிடைக்கும் இடம்:

1. நிர்வாகக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்,
2. உலக பல்கலைக்கழக சேவை
(W.U.S) அலுவலகம்,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

இந்நூலைத் தபாற் கட்டளை / காசுக்கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பதிவுத் தபாற் செலவை மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தபாற் கட்டளை / காசுக் கட்டளை நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
(சி...) யாழ். பல்கலைக்கழகம்.


# 45ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 17 | 02 |
| — | — |
| 05 | 01 |
| — | — |
| 1944 | 1993 |

## ஆறுமுகம் தருமராசா
(உதவிக் கல்விப் பணிப்பாளரும், தொலைக்கல்விப் பொறுப்பதிகாரியும் — கல்வித் திணைக்களம், கிளிநொச்சி)

கடமைதனைப் பெரிதெனவே எண்ணிநின்று
கடல்வழியே பயணமதைத் தொடர்ந்தவேளை
கயவர்களின் வடிவினிலே வந்த காலன்
கண்ணியவான் உந்தனையும் கவர்ந்திட்டானே!

கல்வியிலே பலபடிகள் முன்னே சென்றும்
கற்றோருக்கே உரிய நற்சாந்த பண்பு
அடக்கமதே அறிவின் அறிகுறியாமென
அனைவர்க்குமே உணர்த்தி நிற்கும் —
அரியதோற்றம்

நேர்மையுடன் பண்பாகப் பழகிநின்று
பலரையுமே வழிநடத்தும் இனிய ஆற்றல்
அனைத்தையுமே இழந்ததனால் இன்று நாங்கள்
அடியற்ற மரம்போல ஆகிவிட்டோம்.

பளை தொலைக்கல்வி நிலைய —
போதனாசிரியர்கள், பயிற்சி ஆசிரியர்கள்.

(57-4)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 05 | 15 |
| — | — |
| 04 | 01 |
| — | — |
| 1914 | 1993 |

## திருமதி நல்லம்மா நடராஜா
(ஊரிக்காடு - வல்வெட்டித்துறை)

"மறந்தாலும் பிறந்தாலும் மாண்டாலும் இருந்தாலும் மறவாத தெய்வமெடி தங்கமே. மற்றொன்று மஞ்சாதேயேடி" ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம் நாமறியோம்; முழுதும் உண்மை.
(யோகர் சுவாமிகளின் வாக்கு)

அன்பின் உருவமாய், பண்பின் இலக்கணமாய், பாசத்தின் அமைவிடமாய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புத்தெய்வத்தின் மரணச்சடங்கில் நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பலவழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (14-02-93) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மகன், மருமகன், பேரன்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பழவத்தை
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. [24423]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்

# ஸ்ரீ சட்டநாதர் (நல்லைநாதசுவாமி) ஆலய பரிபாலன சபையின்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் (நல்லை நாத சுவாமி) ஆலயத்தின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவு 14 - 03 - 1993 ஆம் திகதி (ஞாயிறு) மாலை 3-30 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும். புதிய நிர்வாகசபை, பொதுச் சபை உறுப்பினர்களில் இருந்தே தெரிவு செய்யப்படும்.

புதிய உறுப்பினராக சேர விரும்புவோர் ஆலய பரிபாலன சபையின் யாட்புக்கு அமைய பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. சைவ சமயத்தவராக இருத்தல் வேண்டும்.
3. எந்த நீதிமன்றத்திலும் ஒழுங்கீனமான நடத்தைக்கு தண்டிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்
4. நிர்வாக அண்டுச் சந்தாவாகல் (இரண்டுவருடம்) — ரூபா 100/-, ஆயுட் சந்தாவாகில் — ரூபா 300/-.
5. பொதுச் சபைக்கு புதிதாக சேர விரும்புவோர் 01 - 03 - 1993க்கு முன் ஆலய காசாளரிடம் உறுப்பினருக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து உரிய பணத்தினைச் செலுத்தி அத்திகதிக்கு முன் காசாளரிடம் படிவத்தினை ஒப்படைக்கவேண்டும்.

நிர்வாக சபை வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், ஆலய காரியாலயத்தில் பதவிக்குரிய விண்ணப்பப் படிவத்தை பெற்று, நிரப்பி 10 - 03 - 1993 ஆம் திகதி மாலை 5-00மணிக்கு முன் ஆலய தபால் பெட்டிக்குள் இடல் வேண்டும்.

நிர்வாக சபைக்கு விண்ணப்பிக்கும் உறுப்பினர்கள்:

அ. ஆயுட்கால அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

ஆ. ஒரு வருடத்திற்கு குறையாது ஆலய வழிபடுவோர் சபை உறுப்பினராக இருத்தல் வேண்டும். [இந் நிபந்தனை முன்னைய ஆயுட்கால உறுப்பினருக்குப் பொருந்தாது

பிரேரணைகள் 10 - 03 - 1993க்கு முன் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

— செயலாளர்.

[24412]



# எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்பக் கல்லூரி

## மரவேலைப் பயிற்சி

தீவுப்பகுதி இளைஞர்களுக்கு அகில உலக கெயர் நிறுவனத்தால் நடத்தப்படவிருக்கும் மரவேலைப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்;

15 வயதுக்கு மேற்பட்டோரும், 8 ஆம் வகுப்புக்கு மேல் படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

கொடுப்பனவுகள்:

2½ மாத பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் 600/- ஊக்குவிப்பு பணமாக வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **19 — 02 — 1993**

நேர்முகப் பரீட்சை திகதி: **20 — 02 — 1993**
காலை 9 00 மணி

இயக்குனர்,
304, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(5796)


# அம்பாறை அகதி முகாமில் தீ!

கொழும்பு, பெப். 13

அம்பாறை மாவட்டம், காரைதீவு கிராமத்தில் உள்ள அகதி முகாம் கடந்த வியாழன் காலை திடீரென தீப் பற்றிக் கொண்டது.

அப்போது 15 குடிசைகள் எரிந்து சாம்பராகியது இரு குழந்தைகள் உடல் கருகி மரணமடைந்தனர். அகதிகளின் உடைமைகளும் சேதமடைந்தன. (த-எ)

# தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு;

# சிறப்புத் தகைமை பெற்ற மாணவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 13

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்திய தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில், யாழ். கல்விக் கோட்ட மட்டத்தில் சிறப்புத் தகைமை பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு;

**யாழ். கோட்டம்;**

அலோசியஸ் அமிர்தநாதன் டொமினிக் அரவிந்தன் - (யாழ். இந்து), தர்மராஜன் வினோதன் - (யாழ். இந்து), ஜெயராஜா ஜெயகாந்தன் - (யாழ். இந்து), ஜெயராஜசிங்கம் மருதா - (சுண்டிக்குளி மகளிர்), சதாசிவம் ரஜீவ் - (இந்து)

**வடமராட்சிக் கோட்டம்**

கந்தசாமி பிறிந்திகா - (வடமராட்சி மகளிர்), இராஜரெட்ணம் ரமேஸ்சங்கர் - (ஹாட்லி), செல்வராஜா ரமேஸ் - (ஹாட்லி), ஜென் மந்தாகினி பூரணம்பிள்ளை - (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), சிற்றம்பலம் சதீஸ் - (ஹாட்லி)

**தென்மராட்சிக் கோட்டம்**

நல்லையா வானதி - (சாவகச்சேரி இந்து), விஜயரெட்ணம் சகிலா - (சாவகச்சேரி இந்து), கிருஸ்ணசாமி திவ்வியன் - (சாவகச்சேரி இந்து), குமாரசாமி திருச்செல்வி - (சாவகச்சேரி இந்து), கந்தையா ரேணுகாபதி - (சாவகச்சேரி இந்து)

**பண்டத்தரிப்புக் கோட்டம்**

திருநாவுக்கரசு ஜெகதீஸ்வரி (வட்டு இந்து), ஞானசேகரராசா யூலியனா மரிய கௌசலியா - (இளவாலை கன்னியர் மடம்), தங்கராசா பகீரதன் - (மகாஜனா), குருசாமி சுபாசினி - (யாழ்ப்பாணக் கல்லூரி), சேனாபதி தயாளினி - (பண்டத்தரிப்பு மகளிர்),

**மருதனார்மடக் கோட்டம்**

லோகப்பிரகாசம் மதனி - (ஸ்கந்தவரோதயா), அரியரெட்ணம் கோபிகா - (உடுவில் மகளிர்), பாலசிங்கம் கோஷலி - (உடுவில் மகளிர்), சற்குணசிங்கம் சற்குணானந்தன் - (மானிப்பாய் இந்து), ஜெகநாதன் சஸ்மிதா - (மானிப்பாய் இந்து மகளிர்)

**வேலணை கல்விக் கோட்டம்**

வல்லிபுரம் சுகந்தன் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்), திருஞானம் றஜேந்தன் - (சேர். வைத்திலிங்கம் துரைசாமி மகா வித்தியாலயம்), சுந்தரம்பிள்ளை அருள்ஜோதி - (சேர். வைத்திலிங்கம் துரைசாமி மகா வித்தியாலயம்), இந்திரநாதன் சுஜாதா - (கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்), செல்வக்குமார் சுகுணகுமாரி (மண்டதீவு மகா வித்தியாலயம்).

இத்தேர்வில் தேசியப் பரிசுகள் பெறும் மாணவர்களின் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகின

சிறப்புத் தகைமை பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். [த]

# ஓய்வூதிய திட்டம்

கொழும்பு, பெப். 13

யாழ் மாவட்டத்தில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களான கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த இருக்கின்றன. [த 3]

# சைக்கிள் பறிபோனது

யாழ்ப்பாணம், பெப். 13

நிவாரணப் பொருள்களை விநியோகித்துக் கொண்டிருந்த ப. நோ. கூ. சங்கக் கிளை முகாமையாளரின் சைக்கிள் பறிபோனது.

தெல்லிப்பளை ப நோ. கூ. சங்கத்தின் இணுவில் நிவாரணக் கிளையில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

கடையின் அருகில் தனது சைக்கிளை நிறுத்தி விட்டு வேலையில் ஈடுபட்டிருந்த சமயம் சைக்கிள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)


# அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள்
பிராந்திய திணைக்களம், யாழ்ப்பாணம்.

## 1993ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுக்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. காகிதாதிகள்.
02. பாவனைப் பொருள்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்).
03. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்.
04. மரத்தளபாடங்கள் மரத்தளபாட திருத்தவேலைகள்.
05. உருக்குத் தளபாடங்கள், உருக்குத்தளபாட திருத்தவேலைகள்.
06. பிளாஸ்டிக் பொருள்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பை வாளி முதலியன).
07. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள், ஆமைப்பூட்டுகள், வாளி வகைகள், குப்பைவாளி. மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியவை.
08. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்.
09. வைத்தியசாலை உபகரணங்கள், (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறுகட்டில்கள், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்).
10. கட்டடத் திருத்தத்திற்கு அவசியமான பொருள்கள்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், ரியூப் உட்பட)

### பதிவு செய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்.
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்.
4. கிராமோதய சபைகள்.
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்.
6. சனசமூக நிலையங்கள்
7. வருமானவரி செலுத்தும் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்.

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர், உரிய விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூ 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 01-03 1993 திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1993 ஆம் ஆண்டிற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்.

சுகாதார சேவைகள் பிராந்திய -
பணிப்பாளர் பணிமனை,
59, விகடோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
09-02-1993.

[சி-4240]



# புதிய ஆரம்பம்

உங்கள் புகைப்படத் தேவைகள் யாவையும் நிறைவு செய்வதற்கு
பத்து வருடங்களுக்கு மேலாக வெளிப்புற படப்பிடிப்பு சேவையில்
அனுபவம் பெற்ற

## குணம் படப்பிடிப்பாளர்

தங்கள் உள்புற படப்பிடிப்பு சேவையை மானிப்பாய் தபால் நிலையத்திற்கு முன்பாக
புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் படப்பிடிப்பு நிலையத்தில்
இன்று (13 — 02 — 1993) சனிக்கிழமை காலை 10 மணிக்கு
ஆரம்பிக்க இருப்பதால்
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி:

- உரிமையாளர்.

(24400)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (24314)

அல்சேஷன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சனி பிற்பகல் 2-5, ஞாயிறு காலை 9-5 மணி வரை, இல: 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (24417)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து, செவ்வாய்க் குற்றமுள்ள, லண்டனில் விசாவுடன் படித்துக் கொண்டு வேலை செய்பவருக்கு அழகான, படித்த, ஆங்கிலத்தில் வேலைசெய்யக்கூடிய செவ்வாய்க் குற்றமுள்ள 26 வயதிற்கு உட்பட்ட, 5அடி 2 அங். உட்பட்ட, இங்கிலாந்திற்கு போக விரும்பும் மணப்பெண் தேவை திருமணம் இலங்கையில் செய்து விசாவுடன் அழைக்கப்படுவர். இல: 498, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (24415)

## திருமண சேவை

எம்மிடம் சகல தரத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும். சித்திரகலா திருமண சேவை, 71, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (5793)

## சோதிடம்

கைப்பலனறிஞர்-கோளறிவாளர், செ.இராசேந்திரன், ''வீரலட்சுமி'' (முதல்வீடு) கோயில்வீதி, கொக்குவில் கிழக்கு. அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு இடமாற்றத்தை அறிவிப்பதுடன், தங்கள் பிரச்சினைகள் எதுவானாலும், தீர்க்கமான தீர்வுக்கு ஆலோசனை பெற அழைக்கின்றோம். (24414)

## தபால் வழிக் கல்வி

தபால் வழி பாலர் ஆசிரியர் பயிற்சி வகுப்பு குறைந்த பட்சம் தகமை க.பொ.த. (சா/தரம்) நேரிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம் (24416)

## ENGLISH COURSE

Literature, Grammar and Spoken ஆங்கிலம் விரிவான விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. மூன்று மாதப் பயிற்சி, கிழமையில் 2 நாட்கள், V. N. Kandasamy A. I. B Part I (London). Inter (London), 87. திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு அண்மையில்), கொக்குவில். (5795)

## நினைவுத் தூபி திறப்பு

தென்மராட்சி, பெப் 13 சடந்த 987 பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி கதடியில் எதிர்பாராத விதமாக இடம்பெற்ற குண்டுவெடிப்பில் வீரமரணமடைந்த லெப். கேணல் பொன்னம்மான், மேஜர் கேடில்ஸ் உட்பட ஒன்பது போராளிகளின் நினைவாக, சம்பவம் நடந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகள் நாளை திறந்து வைக்கப்படவுள்ளன. (த- 17)

# இளங்கலைஞர் மன்றத்தின் 13ஆவது இசை விழா

இடம்: மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

5ஆம் நாள் **13-02-93** சனி

யாழ். வர்த்தக வங்கியின் ஆதரவில்

**மாலை 4-00 — 5-00 மங்கள இசை**

நாதஸ்வரம்: பி. எஸ். பிச்சையப்பா, பி. ரஜீ, என். மகேந்திரன், எஸ். கண்ணன்

தவில்: பி. ரவி, பி. சபேசன், என். உதயகுமார், என். கணேசமூர்த்தி

**5-00 — 5-15 பாட்டு**

பி. கார்த்திகாயினி, எஸ். அபிராமி, பி. கமலாங்கி அம்மா, பி. சோமிளா, என். நந்தினி, ஆர். மஞ்சுளா.

வயலின்: — ஆர். எஸ். கேசவமூர்த்தி

மிருதங்கம்: — எஸ். ஹரிதரன்

**5 15 — 5 30 வயலினிசை**

இராமகிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரி மாணவிகள்

வயலின்: — ஆர் காயத்ரி, ஆர். அஜந்தினி, ஆர். மைத்திரி, ஆர். சுகந்தினி, ரி. தனேஸ்வரி, ஜே. ஜெயஸ்ரீ, கே. திருமகள், ரி. பூங்கோதை, எஸ். திலகவதி,

மிருதங்கம்: — பி. ரதிரூபன்

**5-30 — 6-00 பாட்டு - சுகன்யா சிவானந்தம்**

வயலின்: — ஆர். எஸ். கேசவமூர்த்தி

மிருதங்கம்: எஸ், நாகராஜன்

**6 00 — 6-45 பாட்டு - வர்ண ராமேஸ்வரன்**

வயலின்: — எஸ். கோபிதாஸ்

மிருதங்கம்: — கே. கண்ணதாஸன்

**6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்**

திரு. டாக்டர் வி. ஏகாம்பரம்
திரு. இ. குகதாஸன், (திருப்பதி ஸ்ரோர்ஸ்)
திரு. க. ஜெயபாலகணேசன்

தலைவர்: எஸ். சிவகுமாரன், (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)

சிறப்பு விருந்தினர்: இ. வெங்கட்ராமன், (பொது முகாமையாளர்-வர்த்தக வங்கி)

**7-00 — 8—00 இசைக்கச்சேரி**

புல்லாங்குழல்: — அ நமசிவாயம்
வயலின்: — எஸ். சர்வேஸ்வரசர்மா
மிருதங்கம்: — கே கண்ணதாசன்,
கடம்: — பி. ரதிரூபன்

**8 00 — 9.00 பரதநாட்டியம்**

திருமதி லீலாம்பிகை செல்வராசாவின் மாணவிகள் கலைக்கோயில், மானிப்பாய்.

நட்டுவாங்கம்: — லீலாம்பிகை செல்வராஜா
பாட்டு: — வர்ணராமேஸ்வரன்
வயலின்: — எஸ். வெங்கடேஸ்வரசர்மா,
மிருதங்கம்: — எஸ். மகேந்திரன்

வாழ்த்துபவர்:

ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-4505)

# நன்றி நவிலல்

## பேரம்பலம் வாரித்தம்பி

(ஓய்வுபெற்ற அதிபர் சென். மேரிஸ் தமிழ்க் கலவன் பாடசாலை, பண்டாரவளை)

18-01-1993 அன்று நடந்த எமது குடும்பத் தலைவர் அமரர் திரு. பேரம்பலம் வாரித்தம்பி அவர்களின் இறுதிக் கிரியைகளுக்குச் சமுகம் அளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், ஆறுதல் கூறியும், ஆதம ஈடேற்றப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர் நோயுற்றபோது அவருக்கு வைத்தியம் செய்த டாக்டர் செல்வராசா அவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்த அன்பர்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைக் கூறுகிறோம்.

மனைவி:
திருமதி தங்கம்மா வாரித்தம்பியும்
குடும்பத்தினரும்.

புத்தூர் சந்தி,
மீசாலை.

(24402)

# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை (14 - 02 - 93) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், சங்கத்தின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொ. சந்திரநாதன்,
கௌரவ செயலாளர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(24410)

# ஈராண்டு நினைவஞ்சலி

தமிழீழ மண்ணில்: 20 — 03 — 1973



தமிழீழ மீட்பில்: 06 — 02 — 1991

## வீரவேங்கை பா. முகிலன் (சுக்ளா)

(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)

திதி: 13 — 02 — 1993

நேருக்கு நேராய் வாதம்
நிகழ்த்திடும் வெள்ளையுள்ளம்
யாருக்கும் நோதல் செய்யா
யதார்த்தத்தில் வாழ்ந்த வாழ்வு
பேருக்காய் மண்ணில் மடிந்தால்
பொறுத்திடா முகிலன்
போருக்கே பாய்ந்தான் களத்தில்
புனித மாவீரன் சுக்ளா!

● கிரியைகள் கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்தில் இன்று நடைபெறும்.

குடும்பத்தினர்,
260, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

65, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம்.

(24399)

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகு: 05 — 01 — 1925



விண்ணுலகு: 12 — 02 — 1985

திருமதி

## நடராசா மகேஸ்வரி (தவமணி)

திதி: 13 — 02 — 1993

எங்கள் அருமைத் தாயே! குடும்பத்தின் ஒளிவிளக்காய், பண்பின் உறைவிடமாய் திகழ்ந்த அன்பின் தெய்வமே! எம்மை அன்பாலும், பண்பாலும் அரவணைத்து வளர்த்தீர்கள்! காலமும், காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்துவிட்டன! எட்டாண்டு சென்றாலும், உங்கள் நினைவு என்றென்றும் நிலைத்து நிற்கும்!

நிறைமனமாய் இறைவனடி இறைஞ்சுகின்றோம் நின் ஆத்ம சாந்திக்காக!

அன்னாரின் பிரிவால் துயருறும்;
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

71/6, புகையிரதநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(5797)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## தந்திரம்

அவசரகாலச் சட்ட விதிகள் சிலவற்றைத் தளர்த்துவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

மக்களின் உரிமைகளைப் பறித்தும் அவர்களை இம்சைப்படுத்த உதவியும் வந்த குறிப்பிட்ட அவசரகால விதிகளை அரசு அவசரமாக நீக்குவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சோழியன் குடுமி சும்மாவா ஆடப்போகிறது? காரியத்தோடு தான்!

இப்போது ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை குறித்து தீவிர பரிசிலனை நடக்கப்போகிறது.

அந்தப் பரிசிலனையின் போது, மனித உரிமைகளை மீறுவதில் ஸ்ரீலங்கா அரசு எந்தளவுக்குக் கங்கணம் கட்டி நிற்கிறது என்பது புட்டுக்காட்டப்பட்டால் உலக நாடுகளிடம் கடன் வாங்கும் வாய்ப்புக் குறைந்து போய்விடும். ஏற்கனவே கீழ் மட்டத்துக்குப் போயிருக்கும் பொருளாதாரம், வெளிநாட்டுக் கடன் இல்லாவிட்டால் மேலும் சீரழிந்து விடும்.

இந்தப் பெரும் பூதத்திற்கு அஞ்சியே அரசு அவசரப்படுகிறது. ஐ. நா மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் வைத்துத் "தோல் உரிக்கப்படுவதற்கு" முன்னர் தனது வழமையான தந்திரத்தைக் கையாண்டு, சந்தர்ப்பத்துக்கு உகந்த ஏமாற்றுக் கலையை நிறைவேற்றி தன்னை ஒரு நல்ல அரசாகக்காட்டிக்கொள்ள ஸ்ரீலங்கா முனைந்திருக்கிறது!

மனித உரிமைகளுடன் கடன் வழங்குதலை மேற்கு நாடுகள் தொடர்பு படுத்திய பின்னர், ஸ்ரீலங்கா அரசு, நீதி வழங்காவிடினும், நீதி வழங்கப்பட்டதாகக் காட்டிக் கொள்ளும் தந்திரத்தைக் கையாள்வதற்கு எத்தனித்து வருவது தெரிந்ததே. தான் மனித உரிமைகளை மீறவில்லை என்று அது 1980களில் தலையில் அடித்துச் சத்தியம் செய்து வந்தது பழைய வரலாறு! ஆனால் உண்மை என் உறங்குவதில்லை. எப்போதோ ஒருநாள் விழித்துக் கொள்ளும்.

அதனால்தான் ஐ. நா. அரங்கில் மீண்டும் ஸ்ரீலங்காவின் துகில் உரியப்படும் நிலைக்கு வந்துள்ளது. அந்த விபரீதத்தில் இருந்து தனது மானத்தைக் காப்பாற்றி, உலகத்தை ஏமாற்றி தொடர்ந்து கடன் பெறுவதை உர்ஜிதம் செய்யவே அவசரகாலச் சட்ட விதிகளை தளர்த்த முன்வந்திருக்கிறது அரசு!

ஐந்து வருடங்களுக்கு முன் மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறை காட்டி வரும் சர்வதேச மன்னிப்புச் சபையுடன் மல்லுக்கட்டிய ஸ்ரீலங்கா அரசு, அதனிடம் மன்னிப்புக் கேட்கும் பாவத்தில் அதன் சிபார்சுகள் சிலவற்றை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த 1991 இல் ஒப்புக்கொண்டது. ஆனால் செயலளவில் ஓர் அடி முன்னேற்றம்தான்!

அதனாலேயே மீண்டும் சுருக்குக் கயிறு கழுத்தில் விழுந்திருக்கிறது. அந்தக் கயிற்றைக் கழற்றுவதற்கே அவசர காலச் சட்ட விதிகளைத் தளர்த்துவது என்ற சமயோசித தந்திரம்.

வடக்கு - கிழக்கு நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கி, தெற்கு மக்களையும் அவசர காலச் சட்டம் கொண்டு அரசு பயமுறுத்தி வைத்திருக்கிறது. எனினும வடக்கு மக்களின் பொருளாதார, போக்குவரத்து உரிமைகளைப் பறித்து அவர்களை முடக்கி வைத்திருப்பது போன்ற மனித உரிமை மீறல் எங்கும் நடக்கவில்லை. அவற்றையும நீக்குவதே உண்மையான மனித உரிமை பேணலாக அமையும்.

## நாளை

ஜோசப்பாலாவின் 'தரிசனம்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா நாளை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.
(ஒ-162 51)

o o o

கைதடியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் வீரமரணம் அடைந்த முன்னாள் தென்மராட்சி பொறுப்பாளர் மேஜர் கேடில்லின் ஆறாம் ஆண்டு நிறைவு தினமான நாளை முகமாலை கேடில்ஸ் தும்புத் தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ள மேஜர் கேடில்ஸ் நினைவுருவப் படம் தென்மராட்சித் தளபதி திரு. குணாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.
(ஒ-117)

o o o

புகைப்படக் கலை அடிப்படைப் பயிற்சிநெறி தொகுதி 1 இன் நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல 11 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் விழாவில் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா சான்றிதழ்களை வழங்குவார். அதன் பின் பொது அமர்வும், மதிப்பீடும் இடம்பெறும்.
(த-5)

o o o

கடந்த ஆண்டில் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகளைப் புரிந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களைப் பாராட்டி விசேட விருந்துபசாரம் ஒன்று நாளை பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது

பல்கலைக்கழக விளையாட்டுத்துறை இதை ஒழுங்கு செய்துள்ளது.
(க-161)

o o o

யாழ். கலைப்புலவர் வீதி மெய்கண்டதேவர் ஆதீனத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் திருவாசக ஞான விளக்கத் தொடரின் முதலாவது விரிவுரை நாளை பிற்பகல் 3 மணிக்கு திருவாசக மன்றத்தில் நடைபெறும். திருவாசக மணி க. மாணிக்கவாசகர் விரிவுரையை நிகழ்த்துவார்.
(த)

o o o

ஞானசம்பந்தர் கலைமன்றமும், வடமராட்சி சுருக்கெழுத்து கழகமும் இணைந்து நடத்தும ஷோல்ஸ் முத்தையா நினைவு வார விழா - 1993, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்ற மண்டபத்தில் நடைபெறும்.
(க)

o o o

குருநகர் புனித யாகப்பர் கலைமன்றத்தின் "வீரமாதேவி" சோழர் வரலாற்று நாட்டுக் கூத்து நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு குருநகர் கலை அரங்கில் மேடையேற்றப்படும்.
(க-51)

o o o

அராலி மேற்கு புங்கங்குளி நல்லொளி சனசமூக நிலையத்தின் முதலாம் ஆண்டு விழா நாளை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.
(க-161)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப் 13

கோப்பாய் வடக்கு கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் இன்று மாலை நடத்தவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் வருமாறு :—

★ திருமலை நட்சத்திரங்கள் வி. க. அணி எதிர் ஸ்ரீ முருகன் அணி

★ கொய்யாத் தோட்டம் அணி எதிர் கோல்ட் ஸ்ரார் அணி.
(உ)

## இன்று

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மாதர் குழு உறுப்பினர்களுக்கான கருத்தரங்கும் வேலைக்கள பயிற்சியும் இன்று காலை 9 30 மணியளவில் கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும்.
(த-162)

o o o

நாவற்குழி லவனிதா குடியேற்றத் திட்டத்தில் அறவழிப் போராட்டக்குழு நடத்திவரும் தையல் பயிற்சி வகுப்பு மாணவிகளின் தையல் பொருட்காட்சி இன்றும் நாளையும் நடைபெறும்.
(ஒ-117)

o o o

சுழிபுரம் மேற்கு ஐயனார் ஆலயத்தில் இன்று மாலை 6 மணிக்கு திருவாசக மனனப் போட்டி பரிசளிப்பு விழா நடைபெறும்

மேற்படி போட்டியை ஆலய தொண்டர் பஜனைச் சபையினர் நடத்தியிருந்தனர்.
(ஒ-28)

## நீர்கொழும்பில் இருவர் கைது

கொழும்பு, பெப் 13

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இரண்டு பேர் நீர்கொழும்பில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர் என்றும் —

இவர்கள் யாழ்ப்பாணம் கோட்டை முகாம், ஆனையிறவு முகாம் ஆகியவற்றின் மீதான தாக்குதல்களில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் என்று தெரியவருவதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
(த-எ)

போதியளவு நிதி வந்து சேராததால்

# யாழ். மாநகரசபையின் அபிவிருத்தி வேலை பாதிப்பு

அரியாலை, பெப். 13

இவ் ஆண்டிற்கான யாழ். மாநகரசபையின் அபிவிருத்தி, புனரமைப்பு வேலைத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியை வழங்க முடியாதுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது. இதனால் யாழ் மாநகரசபையின் வேலைத் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியை இதுவரை காலமும் பில் உள்ள மூன்று ஸ்தாபனங்களே புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக யாழ். மாநகர சபைக்கு வழங்கி வந்தன.

ஆனால் தற்போது இவ் ஆண்டுக்குத் தேவைப்படும் நிதியை புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்க மேற்படி ஸ்தாபனங்கள் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக யாழ் மாநகர சபையின் அபிவிருத்தி வேலைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ் மாநகர ஆணையாளர் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார்.
(த-17)

## திருடன், பிடிபட்டான்

மந்திகை, பெப். 13

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை வளவிற்குள் உள்ள மின்மாற்றி இணைப்புக்களை திருடியவர் வைத்திய சாலை ஊழியர்களால் திருடப்பட்ட பொருள்களுடன் பிடிபட்டார்.
(த-87)

## பகிஷ்கரிப்பு

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தமிழக சட்டசபைக் கூட்டத்தொடரை நேற்று பகிஷ்கரித்தனர்.

தமது கட்சி உறுப்பினர்களைப் பேசவிடாது சபாநாயகர் தடுத்த செயலைக் கண்டிக்கு முகமாகவே, கூட்டத் தொடரை பகிஷ்கரித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.
(உ-எ)

# பாட்டாளி கட்சிக்குத் தடை அமைச்சரவை குழு ஆராயும்

சென்னை பெப் 13

தமிழகத்தில் செயற்படும் பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்வது பற்றிய யோசனையை, அரசியல் விவகாரங்கள் தொடர்பான இந்திய மத்திய அமைச்சரவையின் உபகுழு இம்மாதம் 17ஆம் திகதி பரிசீலனை செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்வது பற்றிய 25 பக்க அறிக்கை மத்திய அமைச்சரவை உபகுழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது

இந்த அறிக்கையை முன்னதாக இந்திய மத்திய சட்ட அமைச்சு திருத்தி அமைத்தது.
(உ-எ)

# பாட்டாளி மக்கள் கட்சியுடன் இந்திரா காங்கிரஸ் உறவா?

## அ.தி.மு.கவினர் சபையில் கேள்வி

இந்திரா காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சியுடன் புதிய உறவு கொண்டுள்ளதா?

அ. தி மு. க. உறுப்பினர்கள் தமிழக சட்டசபையில் முன்கண்டவாறு நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸைச் சந்தித்துப் பேசியது பற்றி பிரஸ்தாபித்தபோதே அ. தி. மு. க. உறுப்பினர்கள் முன்கண்ட கேள்வியை எழுப்பினார்கள்.

இதே வேளை —

அ. தி மு க. — பாரதிய ஜனதா கட்சியுடன் புதிய உறவு கொண்டாலும், தி. மு. க. இந்திரா காங்கிரஸுடன் கூட்டு வைக்காது என்று தி. மு க. தலைவர் மு கருணாநிதி தெரிவித்துள்ளார். (உ எ)

# தமிழக அ.தி.மு.க ஆட்சியை உடன் கலைக்க வேண்டும்

## ஜனதா கட்சி கோரிக்கை

சென்னை, பெப். 13

தமிழ்நாடு சட்டசபையை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்து ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்ய வேண்டும். என்று தமிழ்நாடு ஜனதா கட்சி, புதுடில்லி அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் நாட்டில் பிளவுசக்திகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்றும். —

அவற்றைத் தடுத்து நிறுத்த அ. தி மு. க. அரசு தவறிவிட்டது என்றும் தமிழ்நாடு ஜனதா தலைவர்களில் ஒருவரான திருமதி சந்திரலேகா தெரிவித்துள்ளார்.
(ஒ-எ)

## குடாநாட்டு,..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளிலும், காரைநகர், மாதகல், கரையோரப் பகுதிகளிலும் ஹெலிகள் அதிகளவில் பறந்து திரிந்தன.

பலாலியில் விமானங்கள் தரையிறங்கிச் சென்றன. அதேசமயம் இரைச்சல் குறைந்த புதிய ரக விமானம் ஒன்றும் பலாலியில் தரையிறங்கிச் சென்றதாக வடமராட்சியில் பேச்சடிபட்டது.
(ஒ-15-155-28)

# தமிழீழத்தின் சுபீட்சத்திற்கு கல்வி அறிவு அவசியம்

## பாராட்டு வைபவத்தில் இளங்குமரன்

யாழ்ப்பாணம், பெப். 12

விடுதலைப் போராட்டம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, கல்வியும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது தமிழீழத்தின் சுபீட்சத்திற்கும், வளத்திற்கும் இன்றியமையாதது கல்வி அறிவு. கல்வி சமுதாயத் தேவைகளின் மையமாக விளங்குவதால் எமது மாணவர்கள் அதில் மேல் நிலையை அடைய வேண்டும்.

விடுதலைப் புலிகள் பிரமுகரும், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளருமான திரு. வே. இளங்குமரன் இவ்வாறு சொன்னார்.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை 4 ஏ பெற்ற யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவன் செல்வன் ஞா. யூட். கிறேசியன் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் 191 புள்ளிகளைப் பெற்ற நல்லூர் ஆனந்த வித்தியாலய மாணவி செல்வி கே. நிஷாந்தி ஆகியோரைப் பாராட்டும் வைபவம் ஒன்று அண்மையில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அந்த வைபவத்தில் திரு. இளங்குமரன் மேலும் பேசுகையில் —

இந்த மாணவர்கள் பரீட்சையில் நல்ல பெறுபேறடைய காரணமாக அமைந்த ஆசிரியர்களின் சேவை போற்றத்தக்கது. எதிர்காலத்திலும் இது போன்ற நிகழ்வுகள் இடம் பெற வேண்டும் — என்றார்.

கல்லூரி அதிபர் திரு. இராமலிங்கம் பேசும் போது —

வசதியீனங்களின் மத்தியிலும் கூட எமது பிரதேசத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய மகத்தான பணியைச் செய்து வருவதற்கு ஆசிரியர்களின் தளராத சேவையும் மாணவர்களின் எதிர்காலம் குறித்த நியாயமான சிந்தனையுமே காரணமாகும் கிராம நகர பாடசாலைகளுக்கு இடைப்பட்ட இக்கல்லூரியின் வரலாறு பெருமைக்குரியது — என்றார்.

மற்றும் பலரும் இந்த வைபவத்தில் உரையாற்றினர்.
(ஒ-த-111)

## இலங்கையில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசு அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

★ வருடத்திற்கு வருடம் இலங்கையில் கொலைகள் அதிகரித்து வருகின்றன.

★ கிழக்குப் பிராந்தியத்திலேயே அதிகளவு மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

★ சிறைக் கைதிகளை பொலிஸார் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

★ நீதி விசாரணைக்குப் புறம்பான விதத்தில் கைதிகள் கொல்லப்படுகின்றனர்.

★ நீதி விசாரணையன்றி ஆயிரக் கணக்கானோர் சிறையில்வாடுகின்றனர்

★ இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து வெளிநாட்டு மனித உரிமைக் குழுக்கள் ஆராய்வதற்கு கொழும்பு அரசு அனுமதி அளித்திருப்பது வரவேற்கத் தக்கது.

★ இலங்கை படையினருடன் கூடித் திரியும் தமிழ்க் குழுக்களும் சித்திரவதை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன

— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது
(உ-எ-6)

## சுயதொழில் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 13

செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் சுயதொழில் திட்டத்துக்காக 40 தையல் இயந்திரங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை அளிக்கும் நோக்குடன் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்துக்காக இந்த தையல் இயந்திரங்களும், துணி வகைகளும் "குமண" கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.
(த-3)

## இங்கிருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேங்கிக் கிடப்பதாகவும் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் இருந்து எடுத்துவரப்பட்ட மேற்படி 87 பொதிகளுக்கும் "கையாளும் கட்டணமாக" 5 ஆயிரம் ரூபாவைச் செலுத்துமாறு கேட்கப்பட்டிருப்பதாகவும அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கும்—வடபகுதிக்கும் இடையிலான கப்பல் சேவையில் இடம்பெறும் சகல போக்குவரத்து விடயங்களுக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரே பொறுப்பு என்றும்—

செஞ்சிலுவைச் சங்கத்தினர் கட்டணம் எதுவும் விதிக்காமல் இச்சேவையை நடத்தி வருவதால் துறைமுக அதிகார சபையினர் "கையாளும் கட்டணம்" கேட்பது தமக்கு விந்தையாக இருப்பதாகவும் —

முன்னர் இருந்திராத இந்தக் கட்டணப் பிரச்சினை கடந்த 5 மாதங்களுக்கு மேற்படி தபால் பொதிகளை எடுக்கச் சென்ற சமயமே முதல் தடவையாக துறைமுக அதிகார சபையினரால் எழுப்பப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டணப் பிரச்சினை காரணமாக 87 வடபகுதித் தபால் பொதிகளும் துறைமுகத்திலிருந்து அகற்றப்படாமல் அங்கேயே தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகிறது.
(உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தர்மையா கனகசபை

காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட, தம்பையா கனகசபை K. T. K. (தொப்பி) 9-2-93 அன்று இராமநாதபுரத்தில் காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பேரின்பராசா, பரமராசா, அருணகிரிநாதன், யோககிரிநாதன், மனோகரதேவி, றஞ்சிதமலர், குலகேஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற சுந்தையா மற்றும் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சறோஜினிதேவி, சண்முகசுந்தரம், காலஞ்சென்ற சிவராசலிங்கம் மற்றும் சுப்பிரமணியம், செல்வமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இராமநாதபுரத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
K. K முருகேசு குடும்பம்

கனகரட்ணம் வீதி,
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

(24424)

## திருமதி கண்மணி இராசரத்தினம்

உருப்பிராயைச் சேர்ந்த திருமதி கண்மணி இராசரத்தினம் அவுஸ்திரேலியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற மு. வ. இராசரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கனகசபை - அன்னம் அவர்களின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற மயில்வாகனம், ஆச்சிமுத்து, செல்லமுத்து, பொன்னையா, அருளம்மா, கதிரவேலு, அன்னலட்சுமி, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியும், வைத்திய கலாநிதி நற்குணம், சற்குணம் (கணக்காளர்), நிர்க்குணன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்திய கலாநிதி அன்னலட்சுமி, மாலினி, உமாராணி ஆகியோரின் மாமியும், வைத்திய கலாநிதி கேதீசன், கலாநிதி யசோதா, உமா, ராதா, ஆனந்தகி, ஆரணி, தாரணி ஆகியோரின் பேர்த்தியாருமாவார். அன்னாரினது அந்திமக் கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன.

தகவல்;
வைத்திய கலாநிதி செ. இந்திரராசா

உரும்பிராய்.

(24413)

## திருமதி நாகேஸ்வரி செல்வராசா

வேலணை வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி நாகேஸ்வரி செல்வராசா நேற்றுக் காலமானார். இவர் செல்வராசாவின் அன்பு மனைவியும், தம்பையா—காலஞ்சென்ற நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், பாலசரஸ்வதி, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, மனோகரன், (அக்குரஸ்ஸ, வர்த்தகர்) ஆகியோரின் மூத்த சகோதரியும், காலஞ்சென்ற அக்குரஸ்ஸ வர்த்தகர் சங்கரப்பிள்ளையின் மைத்துனியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (13-02-93, சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
செல்வராசா
(கணவர்)

பொற்பதி றோட்,
கொக்குவில்.

(24425)

## அன்னபூரணி அம்பாள் பொன்னப்பா

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கைதடியில் வசித்தவருமான அன்னபூரணி அம்பாள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பொன்னப்பாவின் (Chief Clerk) அன்பு மனைவியும், பொ. கந்தையா, பொ. சண்முகரத்தினம், பொ. பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌரி (கொழும்பு), ரமணன் (கனடா), சாந்தி (யூனியன் கல்லூரி), சாந்குமார் (மகாஜனா), திருக்குமரன் (மத்திய கல்லூரி), செல்வக்குமார் (மகாஜனா), சுகன்யா நாயகி (மகாஜனா), முரளீதரன் (கொழும்பு, உதய சங்கர் இசை அமுதன்), உதயன் (கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலை), ரூபன் (கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய அறிவித்தல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
சண்முகரத்தினம் குடும்பத்தினர்
பத்மநாதன் குடும்பத்தினர்
கந்தையா குடும்பத்தினர்

''ஓம் முருகா'',
கைதடி தெற்கு,
கைதடி.

(24426)

மேலும் மரண அறிவித்தல்கள் 2-ம் பக்கத்தில்

# ''பலோமி'' ஆங்கில பரீட்சை இன்று வேம்படியில் நடக்கும்

யாழ்ப்பாணம், பெப். 13

''பலோமி'' ஆங்கிலப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அனுமதி அட்டைகளை இன்று காலை 8 30 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரை தியாகராசா தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்களும், அனுமதி அட்டைகளும், காகிதாதிகளும் நேற்று விமானமூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டன.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அவற்றை 'குமண' கப்பல் மூலம் எடுத்துவந்து யாழ். கல்வி அலுவலக அதிகாரிகளிடம் நேற்று மாலை ஒப்படைத்தனர். (ஒ 3)

# பாரதீய ஜனதா கட்சியில் முன்னாள் தூதர் ஜா சேர்வார்

புதுடில்லி, பெப் 13

கொழும்பில் இந்தியத் தூதராகப்பணிபுரிந்த பின்னர் ஓய்வு பெற்று தாயகம் திரும்பியுள்ள திரு நாகேந்திரநாத் ஜா பாரதீய ஜனதாக் கட்சியில் சேரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானியை திரு. ஜா சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாரதீய ஜனதாக் கட்சியில் சேர்ந்து ராஜ்யசபை உறுப்பினராகும் முயற்சியிலும் திரு. ஜா ஈடுபட்டிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

இதே வேளை - இந்திய வெளிநாட்டுச் சேவையில் அதிசிரேஷ்ட அதிகாரியான தன்னைப் புறக்கணித்துவிட்டு தன்னிலும் பார்க்க கனிஷ்ட அதிகாரியான திரு ஜே என். டிக்ஸிற்றை வெளியுறவுச் செயலாளராக இந்திய அரசு நியமித்தது குறித்து திரு ஜா வருத்தம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

# புதுடில்லிக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடக்கும்

## பாரதீய ஜனதா அறிவிப்பு

புதுடில்லி, பெப். 13

அரசின் தடையை எதிர்த்து புதுடில்லிக்கு வெளியே தாம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப்போவதாக பாரதீய ஜனதாக் கட்சி கூறியுள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுமார் 15 லட்சம் இந்துக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் புதுடில்லி நகரினுள் பிரவேசிப்பதைத் தடுக்க, நகரின் 18 நுழைவாயில்களிலும் பலத்தபாதுகாப்பு போடப்படும் என்று புதுடில்லி அரசு தெரிவித்துள்ளது (உ-எ)

## நாடு கடத்தப்பட்ட

# சுவிஸ் பிரஜை குறித்து பல புதிய தகவல்கள்

கொழும்பு, பெப். 13

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு இலங்கை அரசால் நாடு கடத்தப்பட்ட சுவிஸ் பிரஜை, சுவிட்சர்லாந்தில் பல ஜே. வி. பியினருக்கு புகலிடம் வழங்கியிருந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

நாட்டை விட்டுத் தப்பி ஓடிய ஜே. வி. பியினருக்கு புகலிடம் வழங்குவதற்காக இவர் நிதி சேகரித்தார் என்றும் —

ஜே. வி. பியினருக்கு பணமும் ஆயுதங்களும் வழங்குவதில் அவர் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது (உ எ)

# கால்நடை தீவன தட்டுப்பாடு; பாலின் உற்பத்தி வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ். மாவட்டத்தில் நிலவும் கால்நடை தீவன தட்டுப்பாட்டால் பாலின் உற்பத்தி 30 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பிரமுகர் ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கால்நடைகளுக்கு தேவையான தீவனத்தை தயாரிக்க அரிசி, புண்ணாக்கு, தவிடு போதியளவு கிடைக்காததால், கூடுதல் பால் தரும் மாடுகள் குறைந்த பாலையே தருவதாகவும்—

போதிய மருந்துவகைகள் கொழும்பில் இருந்து கிடைக்காததால் மாடுகள் நோய் வாய்ப்பட்டு இருப்பதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் ஒரு நாளைக்கு 800 லீற்றர் பால் கிடைத்ததாகவும்— தற்சமயம் 600 லீற்றர் பாலே கிடைப்பதாகவும்— அவர் மேலும் தெரிவித்தார்

## மூவர் கைது

சென்னை, பெப். 13

விடுதலைப் புலிகள் தலைவர் திரு பிரபாகரனின் படத்தை வைத்திருந்ததற்காக மூன்று பேரை, காரைக்குடிக்கு அருகே ஐந்துவிளக்கு என்னுமிடத்தில் வைத்து தமிழகப் பொலிஸார் கைது செய்தனர்.

திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றிக் கொண்டிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர். (உ-எ)

## 1,510 தமிழக...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவரே இத்தகவல்களைத் தெரிவித்தார் என்றும் சென்னைப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கேந்திர நிலையங்களைத் தாக்கத் தாங்கள் திட்டமிட்டிருந்ததாக அவர்கள் சாமுவேல் தெரிவித்தாராம். (ஒ-எ)

# பட்டினிச் சாவுகளை குடாநாட்டில் தவிர்க்குக!

## யாழ். ஆயர் பிரேமாவுக்கு மகஜர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பட்டினிச் சாவுகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு உடனடியாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களுடன் அதிக கப்பல்களை அனுப்புக!

— இவ்வாறு யாழ். ஆயர் அதி. வண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கேட்டுள்ளார்.

தொண்டர் ஸ்தாபனங்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு உணவு வகைகளை அனுப்பி வைக்க அனுமதிக்க வேண்டும் என்றும்—

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தனியார் துறையினர் உணவுப் பொருள்களைக் கொண்டுவரவும் மக்கள் போக்குவரத்துச் செய்யவும் தரை அல்லது கடல் வழிப் பாதையைத் திறக்குமாறும்— அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் என்றும் ஆயர் வாழ்த்தியுள்ளார். (அ-51)

# மன்னார் மறை மாவட்டம் வனாந்தரம் ஆகியுள்ளது

## வரவேற்பு விழாவில் ஆயர் உரை

''மன்னார் மறைமாவட்டம் பொருளாதாரம் அழிக்கப்பட்டுள்ள ஒரு வனாந்தரப் பிரதேசமாகியுள்ளது. பயிரை வளர்த்து அறுவடை செய்யும் நேரத்தில் இருப்பிடங்களை விட்டு படையினரால் விரட்டப்படும் துர்ப்பாக்கிய நிலையில் மக்கள் வாழ்கின்றார்கள்''

அண்மையில் யாழ். பேராலய வெளியரங்கில் மன்னார் மறைவட்ட ஆயர் பேரருட் பெருந்தகை இராயப்புயோசப் ஞானானந்தன் ஆண்டகைக்கு வழங்கப்பட்ட வரவேற்பு உபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொ. வரவேற்பு வைபவம் யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது;

''ஐயாயிரம் பிள்ளைகள் கல்வி பெற முடியாமல், போதிய ஆசிரியர்கள் அற்ற நிலையில், மடு அகதி முகாம் பிரதேச மரங்களுக்குக் கீழே கூடிச் செல்லும் நிலையே மன்னார் பிரதேசத்தில் நிலவுகிறது. 85 சதவீதமான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அப்பிரதேசத்தில் இருக்கிறார்கள்'' என்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசியுரை வழங்கினார் மாலை 4 30 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தில் இருந்து ஆயர்கள், குருமார்கள் புடைசூழ- பேராலய காண்டாமணிகள் பேரொலி எழுப்ப-பேராலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட மன்னார். ஆயர் முன்னாள் - இந்நாள் ஆயர்களுடன் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்படைத்தார்.

அதனை அடுத்து மங்கள இசையுடன் வெளியரங்கிற்கு அழைத்து வரப்பட்டு பொது வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. [க-51]

# தெரிவுக் குழுவிலிருந்து ரெலோ வெளியேறும்?

தெரிவுக்குழுவிலிருந்து ''ரெலோ'' அமைப்பும் வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து இவ்வார நடுப்பகுதியில் கொழும்பில் நடக்கவிருந்த கட்சிக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவிருந்தது.

'ரெலோ' இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு. ஸ்ரீகாந்தா இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

அடுத்து நடைபெறும் தெரிவுக் குழுக் கூட்டத்தில் தமது கட்சி எம். பியான திரு. கே. கருணாகரன் பங்குபற்றமாட்டார் என்றும் அவர் சொன்னார்.

''இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடவடிக்கையில் ரெலோ இயக்கம் புதிய அணுகு முறையை கடைப்பிடிக்க தள்ளப்படலாம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் என தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தி வரும் வேளையில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்— பிரதானமாக திருமலையில் — இடம்பெற்று வருகின்றன. கிழக்கு மாகாணம் தமிழர்களின் கையைவிட்டு நழுவிக் கொண்டே போகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடவடிக்கையும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இந்நிலையில் தீர்வு காணும் நடவடிக்கையில் புதிய அணுகு முறையைக் கடைப்பிடிக்க 'ரெலோ' இயக்கம் தள்ளப்படலாம்—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார் (உ-5)

## உதவும் நாடுகளின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுத் தூதர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் ''யாழ் குடா மக்களின் துன்பங்களை குறைப்பதற்கு பூநகரி — சங்குப்பிட்டி பாதையை மீண்டும் திறப்பது பற்றிய சாத்தியம் பற்றி அரசு ஆராய்வதாக அரசுத் தூதுக்குழு வெளிநாட்டுத் தூதர்களிடம் தெரிவித்ததாக திரு. பிரட்மன் வீரக்கோன் சண்டே ரைம்ஸ் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

''அந்தப் பகுதியில் அரசப் படையினரை வாபஸ் வாங்காமல் யாழ். குடாவுடனான பிரதான பாதையை திறக்கும் சாத்தியம் பற்றி அரசு பரிசீலனை செய்யும்''— என்று தூதுவர்களிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் திரு. வீரக்கோன் தெரிவித்தார்.

இதற்கிடையில்—

ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கை அரசின் சார்பில் சட்டமா அதிபர் திலக் மாரப்பன தலைமையிலான குழு கலந்து கொள்ளும் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org